அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விளம்பி ஆண்டு புரட்டாசி - ஐப்பசி அக்டோபர் 2018 முரசு 12 ஒலி 136



பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# திருகார்த்திகை தீப திருவிழா அழைப்பிதழ்



அன்புள்ளம் கொண்ட ஆன்மநேய அன்பர்கள் அனைவருக்கும் வந்தனம்! நினைத்தாலே முக்தி தரும் திருஅருணை அருணாச்சல திருத்தலத்தில் லட்சோபலட்சம் பக்தர்கள் கூடி தரிசனம் செய்கின்ற தீப திருநாளினை முன்னிட்டு நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் வெகு விமரிசையாக மஹாஅன்னதானம், சாதுக்கள் சத்சங்கம் மற்றும் திருஅருட்பா இசை கச்சேரி ஆகிய நிகழ்ச்சிகள் அடங்கிய பெருவிழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாங்கள் அனைவரும் வருகை தந்து தொண்டில் பங்கேற்று குருவருளையும் திருவருளையும் பெற்று வாழ்வாங்கு வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

நவம்பர் 23 2018

**நாள்: 23.11.2018 வெள்ளிக்கிழமை**

**இடம்: சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், திருவண்ணாமலை.**



**திருஅருட்பா**

**திருவண்ணாமலைப் பதிகம் (2497)**

அருட்பெருங்கடலே ஆனந்த நறவே
அடிநடு அந்தமும் கடந்த
தெருட்பெரு மலையே திருஅண்ணா மலையில்
திகழ்சுயஞ் ஜோதியே சிவனே
மருட்பெருங் கடலின் மயங்குகின்றேன் என்
மயக்கெலாம் ஒழிந்து வன்பிறவி
இருட்பெருங் கடல்விட்டு ஏறநின்
கோயிற்கு எளியனேன் வலவரம் அருளே.

**அன்பர்களை இந்த சத்சங்க விழாவின் அறப்பணிகளுக்கு தங்களால் இயன்ற நன்கொடையை அளித்துப் புண்ணிய கைங்கரியத்தில் பங்குகொண்டு உய்யுமாறு வேண்டுகிறோம்.**

1) மஹா அன்னதானம் 5,000 நபர்களுக்கு ------------ ரூ. 1,50,000/-
2) பிரசாதம் --- கேசரி 30கிலோ ------------ ரூ. 10,000/-
சுக்கு காபி 10,000 நபர்களுக்கு ------------ ரூ. 15,000/-
3) திருஅருட்பா இலவச புத்தகம் 20,000 நபர்களுக்கு ------------ ரூ. 25,000/-
4) சொற்பொழிவாளர்கள் மற்றும் இசை கலைஞர்களுக்கு ---- ரூ. 40,000/-
5) பந்தல் மற்றும் ஒலி, ஒளி அமைப்பிற்கு ------------ ரூ. 40,000/-
6) 10 விழாநாட்களிலும் 1 நாள் அன்னதானத்திற்கு ------------ ரூ. 6,500/-

**அன்பர்கள் தங்கள் நன்கொடைகளை அறக்கட்டளையின் வங்கிக் கணக்கான**

**Account details:-** Bank: HDFC Bank Ltd,
Name: Arutperunjothi Vallalar Charitable Trust,
A/C.No: **08761450000048,** Branch: Tiruvannamalai,
IFSC Code: HDFC0000876 ல் அளிக்கவும்.

அழைத்து மகிழும்: *அருள்திரு பாபுசாது* தொடர்புக்கு: **+91 88385 40176**



# திருச்செவிக்கு விண்ணப்பம்

## திருஅருட்பா பக்திப் பாமாலை

### திருப்பள்ளி எழுச்சி

*புன்மாலை இரவெலாம் புலர்ந்தது; ஞானப்*
*பொருப்பின்மேற் பொற்கதிர் பொலிந்தது; புலவோர்*
*சொன்மாலை தொடுத்தனர்; துதித்து நிற்கின்றார்;*
*சுத்த சன்மார்க்க சங்கத்தவர் எல்லாம்*
*மன்மாலை மாலையாய் வந்து சூழ்கின்றார்;*
*வானவர் நெருங்கினர்; வாழி என்கின்றார்;*
*என்மாலை அணிந்தஎன் அருட்பெருஞ் ஜோதி;*
*என்பதியே பள்ளி எழுந்தருள் வாயே.*

### முறையிட்ட பத்து

*பொன்னைப் பொருளா நினைப்போர்பால்*
*போந்து மிடியால் இரந்து அலுத்தேன்;*
*நின்னைப் பொருள்என்று உணராத*
*நீசன் இனிஓர் நிலைகாணேன்;*
*மின்னைப் பொருவும் சடைப்பவள*
*வெற்பில் விளைந்த வியன்கரும்பே;*
*முன்னைப் பொருளே தணிகையனே;*
*முறையோ முறையோ முறையேயோ.*

### போற்றித் திருப்பதிகம்

*அருள்தரல் வேண்டும் போற்றி என்அரசே*
*அடியனேன் மனத்தகத்து எழுந்த*
*இருள்கெடல் வேண்டும் போற்றி; எந்தாயே*
*ஏழையேன் நின்றனைப் பாடும்*
*தெருள்உறல் வேண்டும் போற்றி என்அறிவே*
*சிந்தைநைந்து உலகிடை மயங்கும்*
*மருள்அறல் வேண்டும் போற்றி என்குருவே*
*மதிநதி வளர்சடை மணியே.*

..திருச்சிற்றம்பலம்..

# முத்திக்கு மூன்று

மனிதன் மருத்துவ விஞ்ஞானத்தை முதன் முதலில் எவ்வாறு கருத்தில் உருவாக்கினான் என்பதை நாம் எளிதில் புரிந்துகொள்ள முடியும். அவன் தேகத்தால் துன்புற்றான்; எனவே தன்னைக் குணப்படுத்திக் கொள்வதற்கு ஒரு வழியைத் தேடினான். ஆனால் அவன் மெய்ஞானத்தை தேடுவதற்கு எங்ஙனம் முயற்சி செய்ய நேர்ந்தது? என்ற கேள்வி நம்மை மிகவும் ஆழ்ந்த சிந்தனைக்கு இட்டுச்சென்றது.

"தேவையே கண்டுபிடிப்பிற்கு மூலகாரணம்" என்பதற்கு இணங்க, தேவையால் உந்தப்பட்ட முற்கால மனிதர்கள் தீவிர ஆர்வமுள்ள ஆன்மீக சாதகர்களானார்கள். அக நிறைவில்லாமல் புறத்தே உள்ள பெரும் வசதியான பொருட்களாலும் நிலையான இன்பத்தைக் கொணர இயலாது என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். அப்படியாயின் ஒருவர் தன்னை எங்ஙனம் உண்மையாக மகிழ்வுறச் செய்ய முடியும்? என்ற வினாவிற்கே நமது ஞானிகள் தீர்வு காணும் பணியை மேற்கொண்டனர்.

இந்த ஞானிகள் காரணகாரிய விதியை கூர்ந்து கவனித்ததின் மூலம் இறைவனைப் பற்றிய கருத்து வளர்ச்சியடைந்தது. மனிதனால் பூமியிலிருந்து மூலப்பொருட்களை எடுத்து, முன்கூட்டியே கருத்திற்கொண்ட எண்ணத்திற்கு ஏற்ப அவற்றை வேறு பொருட்களாக உருவாக்க முடியும் என்றால் இந்த முழு அண்ட சராசரமும் எண்ணங்களிலிருந்தே ஆக்கப்பட்டிருக்க வேண்டும் என முடிவு செய்தனர். இக்கருத்து, ஒவ்வொன்றும் முதல் எண்ணமாகவே இருந்திருக்க வேண்டும் என்ற கோட்பாட்டிற்கு இட்டுச் சென்றது. யாராவது ஒருவர் அந்த முதல் எண்ணத்தை அல்லது பிரபஞ்ச திட்டத்தை உருவாக்கி இருக்க வேண்டும். இங்ஙனமாக பகுத்தறிவுள்ள மனிதர்கள் காரணகாரிய விதியை உவமானமாகக் கொண்டு, ஒரு முழுமுதற் காரணம் இருக்கவே வேண்டும் என வாதித்தனர்.

செங்கற்களைக் கொண்டு வீடு கட்டப்படுவது போலவே சகல சடப்பொருள்களும் கண்ணிற்குப் புலப்படாத கட்டுமானப் பொருட்களாகிய எலக்ரான்கள் மற்றும் புரோட்டான்களால் ஆக்கப்பட்டுள்ளன என்பதை விஞ்ஞானம் அறிந்துள்ளது. ஆனால் ஏன் சில எலக்ரான்களும் புரோட்டான்களும் மரமாகவும், மற்றவை மனித வடிவங்களாகவும் மற்றும் வெவ்வேறு பொருட்களாகவும்

*ஆயின என்றும் எந்தப் பேரறிவு அவைகளை வழிநடத்துகின்றது எனவும் விஞ்ஞானத்தால் கூறமுடியவில்லை. ஆனால் நமது மகான்கள், "அனைத்தும் தோன்றி மற்றும் ஒடுங்கும் இடமாகிய மூலஸ்தானம் இறைவன்" என்றனர்.*

*ஒவ்வொரு மனிதனும் சடப்பொருள் மற்றும் உயிர்ப்பொருள் என்ற இரண்டினுடைய பிணைப்பு என்பதை அறிந்ததால் முற்கால சிந்தனையாளர்கள் இரு தனிப்பட்ட சக்திகள் இருந்தன என நம்பினர். பின்பு அவர்கள், "இயற்கையில் ஒவ்வொன்றும் ஏன் ஒரு குறிப்பிட்ட வகையில் அமைக்கப்பட்டுள்ளது? மனிதனின் ஒரு கரம் மற்றதை விட ஏன் நீண்டதாக இல்லை? நட்சத்திரங்களும், கிரகங்களும் ஏன் மோதிக் கொள்வதில்லை? பிரபஞ்சத்தில் எங்கும் ஒழுங்கு முறையும், இணக்கமும் ஏன் இருக்கிறது" என்று தங்களையே வினவத்தொடங்கினர். சடப்பொருளும், உயிர்ப் பொருளும் வேறாகவும், சுதந்திரமானவையாகவும் இருக்க முடியாது; ஒரு தனிப்பேரறிவு அனைத்தையும் கட்டுப்படுத்த வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். இந்த முடிவு, சடப்பொருளின் தோற்றத்திற்குக் காரணமாகவும், அதன் உள்ளும், அதற்கு அப்பாலும் பேரறிவாக இறைவன் மட்டுமே இருக்கிறார் என்ற முடிவிற்கு நமது ஞானிகளை இயல்பாகவே இட்டுச் சென்றது. கீழ் காணும் திருஅருட்பா பாசுரம் இதனை உறுதிபடுத்துகின்றது.*

**அகரநிலை விளங்குசத்தர் அனைவருக்கும்; அவர்பால்**
**அமர்ந்தசத்தி மாரவர்கள் அனைவருக்கும்; அவரால்**
**பகரவரும் அண்டவகை அனைத்தினுக்கும்; பிண்டப்**
**பகுதிகள் அங்கு அனைத்தினுக்கும்; பதங்கள் அனைத்தினுக்கும்;**
**இகரமுறும் உயிர் எவைக்கும்; கருவிகள் அங்கு எவைக்கும்;**
**எப்பொருட்கும்; அனுபவங்கள் எவைக்கும்; முத்தி எவைக்கும்;**
**சிகரமுதல் சித்திவகை எவைக்கும்; ஒளிவழங்கும்**
**திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வம் ஒன்றே கண்டீர். - திருஅருட்பா.**

*தேடுபவர்கள் எங்ஙனம் இறைவனை முதலில் கண்டனர் என்ற வினாவிற்கு விடை காண முற்படும்போது முதல் படியாக அவர்கள், உலகத்துடனும் சடப்பொருளுடனும் உள்ள தொடர்பைத் துண்டிக்க தங்கள் கண்களை மூடினார்கள்; இதனால் அவற்றிற்கு பின் உள்ள பேரறிவைக் கண்டுபிடிக்க முழுமையாக ஒருமுகப்பட முடிந்தது. ஐம்புலன்கள் ஊடாகக் கிடைக்கும் சாதாரண அறியும் ஆற்றலால் இயற்கையில் இறைவனின் இருப்பைக் காண முடியாதென அவர்கள் வாதித்தனர். எனவே அவர்கள் மேன்மேலும் ஆழ்ந்த ஒருமுகப்பாடு மூலம் இறைவனைத் தங்களுக்குள்ளேயே உணர முற்பட்டார்கள்.*

*இறுதியாக அவர்கள், ஐம்புலன்கள் அனைத்தையும் அடைத்து, அதன் மூலம் சடப் பொருள் உணர்வை தற்காலிகமாக முழுமையாகத் தவிர்ப்பது எப்படி என்பதைக் கண்டுபிடித்தார்கள். பரம்பொருளின் அகவுலகம் புலப்பட ஆரம்பித்தது! தமது அகமுகமான ஆராய்ச்சியில் இருந்து விலகாமல் விடாமுயற்சியுடன் செயல்பட்ட பண்டைக்கால நமது மகான்களுக்கு இறுதியாக இறைவன் தன்னை அன்பு மயமாக வெளிப்படுத்தினார்.*

*நாம் ஆண்டவரிடத்தில் உண்மையான அன்பும், ஜீவர்களிடத்தில் உண்மையான தயவும் செலுத்தினால் மட்டுமே இறைவன் வெளிப்படுவான் என்ற பேருண்மை இறுதியாக புலப்பட்டது. இதைத்தான் திருமூலர்*

**அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே – திருமந்திரம்**

*இதை இன்னும் தெளிவாக நம் வள்ளல் பெருமானார்*

**எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்**
**தம்உயிர்போல் எண்ணி உள்ளே**
**ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்**
**யாவர் அவர் உளந்தான் சுத்த**
**சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்**
**இடம்எனநான் தெரிந்தேன் அந்த**
**வித்தகர்தம் அடிக்கு ஏகவல் புரிந்திடஎன்**
**சிந்தைமிக விழைந்த தாலோ** *என விளக்குகின்றார்.*

*“கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல்” என்ற வள்ளல் பெருமானின் வாக்கிற்கிணங்க முதலில் நமக்கு இறைவனின் உண்மை சொரூபத்தை உணர்த்தும் சரியான மார்க்கம் வேண்டும். அந்த மார்க்கத்தை பின்பற்றி இறைவனை தியானித்து உண்மையான இறை அனுபவ உணர்வு வரும் வரை திட வைராக்கியத்துடன் ஆழ்ந்த பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும். அப்போதுதான் நாம் இறைவனை அறிய முடியும்.*

**பிரார்த்தனை என்பது ஆன்மாவின் கோரிக்கையாகும்.** *இறைவன் நம்மை பிச்சைக்காரரர்களாகப் படைக்கவில்லை. ஜீவர்களாகிய நாம் அனைவரும் இறைப்பேரொளியின் சிறிய பகுதியே. இதையே இப்பூவுலகில் தோன்றிய எல்லா மகான்களும் பறைசாற்றுகின்றனர்.*

*ஒரு பணக்கார வீட்டில் சென்று பிச்சை கேட்கும் ஒருவன், பிச்சைக்காரனின் பங்கையே பெறுகிறான். ஆனால், ஒருமகன் தனது பணக்காரத் தந்தையிடம் இருந்து தான் விரும்பும் எதையும் பெற முடியும்.*

**ஒருஜாம நேரம் (3 மணிநேரம்) இக விசாரமின்றி பரவிசாரிப்புடன் ஆன்ம நெகிழ்ச்சியோடு தெய்வத்தைச் சிந்தித்துக் கொண்டாவது அல்லது ஸ்தோத்திரம் செய்து கொண்டாவது இருந்தால் நாம் பெற வேண்டியதை பெற்றுக் கொள்ளலாம்** *என்ற வள்ளல் பெருமானின் வாக்கு இங்கு கருதற்குரியது. இறைவன் ஒரு சிறு குழந்தையைப் போன்றவர். அவர் நமது உண்மையான அன்பை மட்டுமே எதிர்பார்க்கிறார்.*

*ஒருவன் தனது செல்வம் முழுவதையும் கொடுக்க விரும்பினாலும் அவருக்கு அதில் விருப்பம் இல்லை. "நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழுங்கண்ணீர் அதனால் உடம்பு நனைந்து நனைந்து அருளமுதே! நன்னிதியே! ஞானநடத்தரசே! என்னுரிமை நாயகனே!" எனக் கதரும் பக்தனின் உள்ளத்தில் அவர் ஓடி வந்து அமர்கிறார்.*

*நாம் இறைவனை நாடும் பொழுது எந்தவித உள் நோக்கத்துடனும் நாடக் கூடாது. ஆனால் அவரிடம் நிபந்தனையற்ற, ஒருமுகப்பட்ட, நிலையான பக்தியுடன் பிரார்த்தனை செய்தல் வேண்டும். அழியும் தேகத்தின் மீது நாம் எவ்வளவு அதிகமாக பற்று வைத்திருக்கிறோமோ அந்த அளவிற்கு இறைவன் மீது நம்முடைய பக்தி அதிகமாக இருந்தால் அவர் நம்மிடம் வருவார்.*

*இறைத்தேடுதலில், பக்திக்கு அடுத்து,* **"உயிர்களிடத்தில் கருணை"** *என்கிற படிநிலை வருகிறது. ஏனெனில், "கடவுள் சர்வ ஜீவ தயாபரன்" மேலும்* **"ஊன் உடம்பே இறைவன் வாழும் ஆலயம்"** *என்பது நம் ஞானிகளின் வாக்கு. இதற்கிணங்க நாம் எல்லா உயிர்களையும் தம்முயிர்போல் எண்ணி கருணை செய்தால்தான் இறைவன் கருணை நமக்குக் கிடைக்கும் என்பது புலனாகிறது. நம் வள்ளல் பெருமானார் உரைநடைப் பகுதியில் அருளியதாவது,*

*"தயவென்பது இரண்டு வகைப்படும். யாவெனில் கடவுள் தயை, ஜீவதயை.* **கடவுள் தயை** *என்பது இறந்த உயிரை எழுப்புதல், தாவரங்களுக்கு மழை பெய்வித்தல், மிருக பட்சி ஊர்வன வாதிகளுக்கு ஆகாரம் நியதியின்படி அருட்சத்தியால் ஊட்டிவைத்தல், சோம, சூரிய, அக்கினிப் பிரகாசங்ளைக் கால தேச வண்ணம் பிரகாசஞ் செய்வித்தல், பக்குவிகளுக்கு அனுகிரகித்தல்,*

அபக்குவிகளைச் செய்ய வேண்டிய அருள் நியதியின்படி தண்டனை செய்வித்துப் பக்குவம் வருவித்தல். **ஜீவதயை** என்பது தன் சத்தியின் அளவு உயிர்க்கு உபகரித்தல் அல்லது ஆன்மநேய சம்பந்தம் பற்றித் தயாவடிவமாயிருத்தல்." என்பதாம்.

இவ்விதம் உள்ளூரையும் இறைவனின் இருப்பை அறியும் நோக்குடன் நாம் விடாப்பிடியாக, சுயநலமின்றி இறைவனிடம் பக்தியும், ஜீவர்களிடத்தில் தயவும் செலுத்தும் பொழுது அவர் நம்மிடம் வந்து நாம் ஒவ்வொருவரும் அந்தப் பேரானந்தப் பெருங்கடலின் ஒரு அங்கம் என்பதை உணர்த்துவார்.

மேலும், நம்முடைய ஒவ்வொரு செயலின்போதும், செயலுக்கு முன்பும், அதை முடித்த பின்பும் இறைவனை நாம் நினைவில் வைத்தால், அவர் தன்னை நமக்கு வெளிப்படுத்துவார். நாம் உயிர்களுக்கு சேவை செய்யும் பொழுது நம் மூலமாக இறைவனை செயலாற்ற விடவேண்டும். அதாவது, நம்மால் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் இறையருளால் நடக்கிறது என்ற நினைவோடு சாட்சி பாவத்துடன் செயலாற்ற வேண்டும். இதுதான் பக்தியின் உயர்ந்த நிலை.

அவர்தான் நம் கால்கள் மூலம் நடக்கிறார்; நம் கைகள் மூலம் பணிபுரிகிறார்; நம் மனதிட்பம் மூலம் சாதிக்கிறார் என நாம் இடைவிடாமல் சிந்தித்தால், அவரை அறியலாம்.

மேலும், நாம் விவேகத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் இறைவனைப் பற்றிய சிந்தனை இல்லாமல் செய்யப்படும் பணிகளுக்கு பதிலாக ஆன்மீக வழியில், ஆக்கப்பூர்வமான, இறை உணர்வுடன் கூடிய பணிகளுக்கு முன்னுரிமை கொப்போம்.

அன்பிற்குரியவர்களே! நாம் இந்த உலகில் உண்மையையும், இன்பத்தையும் தேடி அலைகிறோம். ஆனால் நமக்கு ஆனந்தம் தருவதாக உத்தரவாதம் அளித்த ஒவ்வொன்றும் துன்பத்தையே தருகிறது என்பதை உணர்ந்திருக்கின்றோம். இந்த உலகில் நிலை இல்லாதவற்றால் நமக்கு நிலையான இன்பத்தை தரமுடியாது என்பதே உண்மை. இதையே நம் வள்ளல் பெருமானார் கீழக்கண்டவாறு உரைநடைப் பகுதியில் அருளியுள்ளார்.

"இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள் எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள் என்ற திருவார்த்தை அதனால் தலைவனைத் தொழுவது ஒன்றே தொழிலாக உடையது கடமை"

எனவே நாம் இறைவனை நோக்கி பயணப்பட வேண்டும். நம்முடைய சொந்த தெய்வீகத் தன்மையை கண்டறிந்து இறைவனின் திருவடி நிழலில் வாழ்ந்து களிக்க வேண்டும். "குழந்தை, விளையாட்டில் நாட்டம் கொள்கிறது; இளைஞன், இனக் கவர்ச்சியில் நாட்டம் கொள்கிறான்; வயதானவன், கவலைகளில் நாட்டம் கொள்கிறான்; இங்கு இறைவன் மீது நாட்டம் கொள்கிறவர் மிகவும் குறைவே" என்கிறது இந்த பழமொழி.

நாம் இந்த உலகத்தில் உழைப்பதும், உண்ணுவதும், நடமாடுவதும், அழுவதும் இறைவனுக்காக மட்டுமே என மாற வேண்டும். அதுதான் வாழ்வதற்கான மிகச்சிறந்த வழி. அப்படி செய்வதால் நாம் அவருக்கு சேவை செய்து கொண்டும், அவரை நேசித்துக் கொண்டும் அவருடன் ஆழ்ந்த தொடர்பு வைத்துக் கொண்டும் உண்மையாகவே இன்பமாக இருப்போம்.

நாம் நம்முடைய எண்ணங்கள் மற்றும் செயல்களை ஸ்தூல சரீரத்தின் ஆசைகள் மற்றும் பலவீனங்களின் கட்டுக்குள் இருக்க அனுமதிக்கும் வரை இறைவனை காண முடியாது. நாம் நம்முடைய சரீரத்தின் அதிபதியாக எப்போதும் இருக்க வேண்டும். சூரிய ஒளியானது, கரிக்கட்டி மீதும் வைரத்தின் மீதும் ஒரே அளவாகவே ஒளியை வீசுகின்றது. ஆனால் வைரமே ஒளியை பிரதிபலிக்கிறது. பரம்பொருளை உணர்ந்து அதை பிரதிபலிப்பவை தெளிவான மனங்கள்தாம்.

இறைவன் பகுத்தறிவு என்னும் திறவுகோலை மனிதனுக்கு மட்டுமே கொடுத்திருக்கிறார். அது மிருகங்களிலோ, கற்களிலோ இல்லை. இந்த பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்தால், உலக ஆசைகளை பூர்த்தி செய்வதிலிருந்து இன்பம் கிடைக்கும் என்கிற கற்பனையான எதிர்பார்ப்பை அகற்ற வேண்டும். செல்வச் செழிப்போடு வாழ்வது மட்டுமே போதுமானதல்ல. மேன்மை மிக்க வாழ்வும் அல்ல என்பது புலானாகும்.

மேலும், இந்த சரீரம் ஒரு மின்இணைப்பு பலகையைப் போன்றது. ஐம்புலன்கள் அதன் தொலைபேசிக் கருவிகள். நாம் அவைகள் மூலமாக உலகத்துடன் தொடர்பு வைத்துள்ளோம். இந்த வெளித் தொடர்புகளை விட்டு ஐம்புலன்களையும் அணைத்து வைத்தால் மட்டுமே நாம் இறைவனின் வர்ணிக்க முடியாத ஆனந்தத்தில் வாழ முடியும். பொதுவாக நாம் ஆலய வழிபாட்டில் இந்த உணர்வை குறைந்த காலஅளவே அனுபவிக்கிறோம்.

*ஆனால் இது போதாது. இறைவனுடைய இருப்பை நாம் உணர வேண்டுமென உண்மையாக விரும்பினால், தியானம் என்னும் ஆழ்ந்த செயல் அவசியமாகிறது.*

*ஆனால் இதற்கு அடிப்படை ஜீவர்களிடத்தில் தயவு என்பதை மறந்துவிடக் கூடாது.* **ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியவைகளைச் செய்கின்றவர்கள் கடவுளருக்குச் சிறிதும் பாத்திரமாகார்கள்; அவர்களை ஆன்ம விளக்க முள்ளவர்களாகவும் நினைக்கப்படாது; ஜீவகாருணியம் இல்லாது செய்யப்படுகிற செய்கைகளெல்லாம் பிரயோஜனம் இல்லாத மாயாஜாலச் செய்கைகளே ஆகும்** *என்ற வள்ளல் பெருமானின் வாக்கைக் கருத்தில் கொள்க.*

*நம்மில் பலர் ஆன்மீக சாதனைகளுக்கு நேரம் இல்லை எனக் கூறுகிறோம். ஆனால் இறைவனும் வேலை காரணமாக நம்மைப் பார்த்துக்கொள்ள நேரமில்லை எனக் கூறுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது நம் நிலை என்னவாகும்?*

*எனவே, நம் மனதை ஐம்புலன்கள் மற்றும் பழக்க வாசனைகள் என்னும் கானல் நீரிலிருந்து விடுவித்துக் கொண்டு, இதுவரை கண்டிராத அதிஅழகிய தேசத்தை அடைந்தது இறைவனைக் காணவேண்டும். இதுவே மனிதன் ஆற்றக்கூடிய பணியின் மிக உயர்ந்த வடிவம். மேலும், இதுதான் இறைவனைக் காண்பதற்கான மிகச் சிறந்த சமநிலையான மார்க்கமும் ஆகும்.*

**தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற்ல்லார்**
**அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு**

*பொருள்: தவம் செய்கின்றவரே தமக்குறிய கடமையைச் செய்கின்றவர் ஆவர், அவர் அல்லாத மற்றவர் ஆசை வலையில் அகப்பட்டு வீண் முயற்சி செய்கின்றவரே.*

*எனவே, நம் வள்ளல் பெருமான் வகுத்தருளிய "தவநேயம் (திடவைராக்கியம்), சுத்த சன்மார்க்க நேயம் (உயிர்களிடத்தில் தயவு), சத்தியமாம் சிவநேயம் (ஆண்டவரிடத்தில் அன்பு)" என்ற மூன்று வாக்கிற்கிணங்க வாழ்ந்து வாழ்வில் உய்வடைவோமாக!*

**தவநேயமும் சுத்த சன்மார்க்க நேயமும் சத்தியமாம்**
**சிவநேயமும் தந்து என் உள்ளம் தெளியத் தெளிந்தனையே**
**நவநேய மன்றில் அருட்பெருஞ்ஜோதியை நாடி நின்ற**
**இவனே அவன் எனக் கொள்வார் உன் அன்பர் இருநிலத்தே.**

***...திருச்சிற்றம்பலம்...***

# திருமந்திரம்

**ஒன்று அவன்தானே; இரண்டு அவன் இன்னருள்;**
**நின்றனன் மூன்றினுள்; நான்கு உணர்ந்தான்; ஐந்து**
**வென்றனன்; ஆறு விரிந்தனன்; ஏழு உம்பர்ச்**
**சென்றனன்; தான் இருந்தான்; உணர்ந்து எட்டே.**

*ஒன்றாய் உள்ளவன் சிவபரம்பொருள்; அவனது அருட்சக்தியை வேறாகக் கருதினால், அப்பொருள் சிவம், சக்தி என இரண்டு. மூன்றாவதாகிய ஆன்மாவினுள் நிற்கின்றான். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை உணர்பவன். புலன் ஐந்தும் வென்றான். வன்னம், பதம், மந்திரம், கலை, புவனம், தத்துவம் என்னும் அத்துவாவாக விரிந்தவன். ஏழு உலகத்தையும் கடந்தவன். நெஞ்சே, அவனை உணர்ந்து எய்துக.*

**இருக்கு உருவாம் எழில் வேதத்தின் உள்ளே**
**உருக்கு உணர்வாய் உணர் வேதத்துள் ஓங்கி,**
**வெருக்கு உரு ஆகிய வேதியர் சொல்லும்**
**கருக் குருவாய் நின்ற கண்ணும் ஆமே?**

*வேதம் மந்திரங்களின் தொகுதி. மந்திரம் இறைவனின் வடிவம். மந்திரங்களைச் செபித்து, வேதத்தின் உட்பொருளை அனுபவமாக உணர்ந்தால், உருக்குன்ற உணர்வாய் நிற்பவன் அனைத்தும் கடந்த பரம்பொருளாகிய இறைவன்.*

**மனத்தில் எழுந்தது ஓர் மாயக் கண்ணாடி**
**நினைக்கில் அதனில் நிழலையும் காணார்,**
**வினைப்பயன் போக விளக்கியும் கொள்ளார்,**
**புனக்கடை இச்சித்தும் போகின்ற வாறே.**

*மனத்தில் ஒரு மாயமான கண்ணாடி உள்ளது. எண்ணிப் பார்த்தால் அதன் நிழலைக்கூடக் காண இயலாது. அந்த மனத்தால் மயக்கமே உண்டாகிறது. அந்த மயக்கத்தால் வினைகள் செய்கின்றனர். அவ்வினைகளின் பயன்கள் தம்மை விட்டு நீங்குதற்கு ஆசிரியர் வழிகூறினாலும் ஏற்கமாட்டார். உலகியலில் தாழ்வான இன்பங்களை விரும்பி, வீணே கழிகின்றார். என்னே அபக்குவரின் நிலை.*

திருச்சிற்றம்பலம்

# அறமே தெய்வம்

“அற ஒழுங்கு ஊரை ஆளும்” என்பது பழமொழி. அறநெறி ஒழுக்கத்தில் நின்று வாழ்பவரையே நாடு போற்றுமென்பதில் ஐயமில்லை. அங்ஙனம் வாழ்ந்து சாதித்தவர்களே சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளனர். அவர்களே மனித மனங்களில் நிலைபெற்று வாழ்கின்றனர். அங்ஙனமாயின் அறவொழுக்கம் மனிதன் வாழ்வதற்கு அத்துனை முக்கியமானதா என்ற கேள்வி எழுகின்றது. ஆம், மரத்திற்கு வேர்போல் மனிதனுக்கு அறவொழுக்கம் முக்கியமாகும். இவ்வொழுக்கமே மனிதனை மேன்மையடையச் செய்கின்றது.

இவ்வொழுக்கந்தினைச் சான்றோர்கள், ஒரு இல்வாழ்வான் கடைபிடிக்க வேண்டியவை எவையெனவும், அதுபோல் துறவியின் தூய்மை இன்னெதெனவும், மன்னன் அரசாளும் முறைமை யாதெனவும் மற்றும் வணிகனின் வியாபாரத் தன்மை குறித்தும் தெள்ளத்தெளிவாய் தனித்தனியே வகுத்துள்ளனர்.

பண்டைய தமிழ் இலக்கியங்களில் தொல்காப்பியம் முதல் திருக்குறள், நாலடியார், ஔவையின் ஆத்திசூடி போன்ற சில உதாரண நூல்களோடு இன்னும் பல உள்ளன. **திருக்குறளிலும், நாலடியாரிலும் அறன் வலியுருத்தல்** என்னும் அதிகாரமும், **இன்னிலை** என்னும் நூலில் **அறப்பால்** என்னும் தலைப்பிலும், **முதுமொழிக் காஞ்சி** என்னும் நூலில் **அறிவுப்பத்து** என்னும் தலைப்பிலும், இவற்றைப் போல் **பைந்தமிழ் இலக்கியத்திலும்** மனித வாழ்விற்கு முதன்மையானதாக அறவொழுக்கமே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**தம் குணம் குன்றாத் தகைமையும், தாஇல் சீர்**
**இன் குணத்தார் ஏவின செய்தலும், நன்கு உணர்வின்**
**நான்மறையாளர் வழிச் செலவும், இம் மூன்றும்**
**மேல் முறையாளர் தொழில். – திரிகடுகம்**

அதாவது, தன்குலச் சிறப்பு கெடாத வண்ணம் ஒழுகுதலும், குணஞ் சான்றவர்க்கு ஆவன செய்தலும், நான்மறையாளர் சொல் வழி நிற்றலும் மேலோர் செய்கை. இஃது திரிகடுகம் என்னும் நூலில் சமணப் புலவர்களால் இயம்பப்பட்ட அறவொழுக்கமாகும்.

அப்படியாயின் மனித குலம் எவ்வகையான ஒழுக்கத்தை பேணி ஒழுகுவது? அதனால், பெறுகின்ற பயன் யாது? என்று வினவத் தோன்றுகின்றதல்லவா.

மனித குலம் அடக்கமுடைமை, அன்புடைமை, பொறையுடைமை, கொல்லாமை, கள்ளுண்ணாமை, புறங்கூறாமை, ஒழுக்கமுடைமை, ஈகை, வாய்மை, இனியவைகூறல், செய்நன்றி மறவாதிருத்தல், பிறர்மனை புகாதிருத்தல், கூடாவொழுக்கம், அவா அறுத்தல், துறவு, தவம், மெய்யுணர்தல் மற்றும் அருளுடைமை போன்ற ஒழுக்கங்களை பேணி ஒழுகுதல் வேண்டும்.

இவ்வகையான ஒழுக்கங்களை பேணி ஒழுகுவதால் மனிதப் பிறப்பின் பயனாகிய புருடார்த்தத்தை எய்தலாம். அவையாவன, “தர்ம அர்த்த காம மோக்ஷம்” என வடநூலார் வழங்குகின்றனர். இதனையே “அறம், பொருள், இன்பம், வீடு” என நம் ஞானியர் செம்மொழித் தமிழில் வழங்குவர். இவைகளே முத்திக்கு வித்தாகும் புருடார்த்தங்களாம். அறவழியில் பொருளீட்ட வேண்டும், அறவழியில் இன்பம் துய்க்க வேண்டும் என்பதையே ஞானியர் வலியுறுத்துகின்றனர்.

**அறந்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல்.**

அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை: புகழும் இல்லாதவை.

மனிதப் பிறவியின் பயன் என்பது, “ஒரு வித்து தாவரமாகி, பசுமையாய் காட்சியளித்து தன்னிலிருந்து காய்கனிகளை அளித்து பலன் கொடுக்கின்றதோ, அதுபோல் மனிதப்பிறவி எடுத்தவர் ஒழுக்க சீலராயிருந்து, தவசீலராகி தன்னுள்ளே பூரண இறைப் பேரின்பத்தை அனுபவித்து, அவ்வனுபவத்தின் மூலம் பிறரையும் இன்புறச் செய்வதாம்.” இஃதே பிறவிப் பயனாகிய புருடார்த்தங்களைப் பெற்று முத்தியடைந்த மாந்தர்தம் குணமாகும். முத்தியடைந்த மாந்தர்தம் எண்ணம், சொல் மற்றும் செயல் யாவும் கருணை என்கின்ற ஒன்றையே சார்ந்திருக்கும்.

**“ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்**
**பேர்இல் பிறந்தமை ஈரத்தின் அறிப”**

இஃது அறிவுப் பத்து என்ற தலைப்பில் முதுமொழிக் காஞ்சி என்னும் நூலிலிருந்து அறியப்படுகின்றது.

இதன் பொருள் பெருங்கடல் சூழ்ந்த உலகத்து மக்கள் எல்லாருள்ளும், ஒருவன் பெருங்குடிப் பிறந்தமையை அவன் ஈரமுடைமையாலே அறிவர்.

இக்கருத்தினை வள்ளுவப் பெருந்தகையும் தமது குறப்பாவில்,

**“நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்**
**குலத்தின் கண் ஐயப்படும்”**

இதன் பொருள், ஒருவன் உயர்குடியில் பிறந்தவன் என்பதற்கு அவனிடத்துள்ள கருணையே அறிகுறி என்பதாம்.

அறநெறி வழுவாமல், ஈகையுடனும், கருணையுடனும் வாழ்வோர் மன்னரானாலும், மக்களானாலும் அவர்களே உதாரண புருடர். அத்தகையோரின் வாழ்விற்கு எதுவும் ஈடு இணை ஆகாது. அவர்கள், மனித குலத்தால் மட்டுமின்றி கடவுளாலும் போற்றப்படுகின்றனர்.

**“மன்னருக்கு அழகு செங்கோல் முறைமை”** என்பது நறுந்தொகை நூற்கூற்றாம். அவ்வாறே நீதிநெறி வழுவாமலும், கடவுள் பத்தியிலும், பிறருக்கு இரங்குவதிலும் மற்றும் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கி தன் குலப்புகழினையும், தம்மால் ஆளப்படுகின்ற மக்களை கருணையுடனும் காத்து ஆண்ட அரசன் மனுநீதிச் சோழனின் வரலாறு இங்கு கருதற்குறியது.

அவ்வரசனுக்கு மக்கட்பேறு இல்லை. காலம் கடந்ததால் கவலை கொண்ட மன்னன் திருவாரூர் கமலாலயத்தில் வீற்றிருக்கும் தியாகராஜப் பெருமானை வேண்டினான். பின் இறையருளால் மகவொன்று ஈன்றெடுத்தான். அவனுக்கு வீதிவிடங்கன் என்ற பெயர் சூட்டி வளர்த்தான். இளவரசனான வீதிவிடங்கன் பத்தியிலும், கல்வி கேள்விகளிலும், வீரத்திலும் சிறந்து விளங்கினான்.

இளவரசன் வீதிவிடங்கன், அரசனின் அனுமதி பெற்று தியாகராஜப் பெருமானை தரிசிக்க தேர் ஏறிப் புறப்பட்டுச் சென்றான். இளவரசன் தேரில் போகின்றபொழுது துள்ளி விளையாடிய கன்றொன்று ஓடிவந்து தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டு உயிர் இழந்தது. இதுகண்டு கலங்கி துன்பத்தில் இருந்தவனை தேற்றிய உடனிருந்த சான்றோர்கள், அந்தணரிடம் சென்று பரிகாரம் கேட்டுச் செய்து விடலாமென யோசனை அளித்தனர்.

இதற்குள்ளாக , அரண்மனையில் ஆபத்துக் காலங்களில் மக்கள் மன்னனின் உதவியை நாட கட்டியிருந்த ஆராய்ச்சி மணியினை கன்றின் தாய்ப் பசுவானது தன் கொம்புகளால் முட்டி அசையச் செய்து ஒலி எழுப்பியது.

அதுகேட்டு மன்னன் யாருக்கு என்ன அநீதி நேர்ந்ததோவென ஓடிவந்து பார்க்கையில் பசுவொன்று கண்ணில் நீர் பெருக ஆராய்ச்சி மணியை அசைத்து ஓசை எழுப்பிக் கொண்டிருப்பதைக் கண்டு துணுக்குற்றான்.

மன்னன், பசுவிற்கு என்ன நேர்ந்தது என்று புரியாமல் கலங்கினான். அப்போது அங்கிருந்த அமைச்சன் ஒருவன் இப்பசுவின் கன்று இளவரசனின் தேர்க்காலில் அகப்பட்டு உயிர் மாய்ந்திருக்கக்கூடும் எனக் கூறி வணங்கி நின்றான். மந்திரி கூறியதைக் கேட்டு மன்னன் மேலும், கலக்கமுற்றான். அரசனுடன் இருந்த அமைச்சர் பெருமக்கள் பரிகாரம் ஏதாவது செய்து விடலாம் என யோசனைக் கூறினர்.

மன்னன் அந்த யோசனையை ஏற்கவில்லை. கன்றிழந்து வாடும் பசுவிற்கு நீதியும், பரிகாரமும் எதுவெனில், அப்பசுவினைப் போல் தானும் மகனை இழந்து துன்பத்திற்கு ஆளாவதே என்று எண்ணி கன்று உயிரிழந்த இடத்தில் இளவரசனை கிடத்தி, அவன் மீது தேரேற்றி உயிரை மாய்த்திட உத்தரவிட்டான். அதனை மந்திரியை அழைத்து நிறைவேற்றிடவும் சொன்னான்.

அரசனின் உத்தரவைக் கேட்ட மந்திரி "நானோ இதனை நிறைவேற்றுவது" எனத் துயர்கொண்டு விழுந்து மாண்டான். அதனைக் கண்ட அரசன், நீதி காக்கத் தானே தேரேறிச் சென்றான். தன் மகனை கன்று உயிரிழந்த இடத்தில் கிடத்தி தேரினை ஏற்றி அவன் உயிரினை துறக்கச் செய்து நீதியை நிலைநாட்டினான். அதைக் கண்ட அமைச்சர்களும், ஊர்மக்களும் துக்கம் தாளாமல் வருந்தி நின்றனர்.

அந்நேரத்தில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. வானில் இடபவாகனத்தில் இறைவன் தோன்றி, தன் சொந்த மகனென்றும் பாராமல் நீதியை நிலைநாட்டிய மன்னனின் செயல்தனை மெச்சி ஆசிர்வதித்து, கன்று, இளவரசன் மற்றும் மந்திரியை உயிர்ப்பித்தெழச் செய்து மன்னனை அசரீரியாய் பாராட்டி மறைந்தார். மன்னனும், மக்களும் மகிழ்ச்சியுற்றனர். இஃது நாமனைவரும் அறிந்ததே.

மேலும், இப்புராணத்தை திருவருட்பிகாச வள்ளலார் "மனுமுறை கண்ட வாசகம்", என்று வசன நடையில் இயற்றி அருளியுள்ளார். இப்புராணத்திலிருந்து மனுநீதிச் சோழனின் நீதி வழுவாத் திறமும், உயிரிரக்கமென்னும் ஜீவகாருண்யமும் தெளிவாக விளங்குகின்றது. அதன் காரணமாகவே நம் வள்ளல் பெருமானார் இப்புராணத்தை அருளினார்.

இப்புராணத்தில் மிக முக்கியமான செய்தி ஒன்று இருக்கிறது. அஃது யாதெனில், வேண்டி விரும்பி செய்யும் பெரும் யாகங்களுக்கும், பூசைகளுக்கும் நேரில் தோன்றாத இறைவன் தன் மகனின் உயிரையும், பசுக்கன்றின் உயிரையும் ஒன்றென எண்ணிய மன்னனின் உயிரிரக்கத்தினை கண்ணுற்று மகிழ்ந்து, இவ்விடத்தில் நேரில் தோன்றி மன்னனை ஆசிர்வதித்ததேயாகும்.

*மன்னன் மிகுபெரும் பூசைகளோ, யாகங்களோ ஏதும் செய்யவில்லை. அவன் உயிரிரக்கத்துடன் நீதி வழங்கியதற்காக அறமே உருவான இறைவன் அந்த நிகழ்வு நடந்த வீதியிலேயே நேரில் தோன்றி காட்சியளித்தார்.*

*நாம் பொதுவாக இறைவனைப் பலப்பல வடிவங்களில் வழிபடுகிறோம். ஆனால் இறைவனின் உண்மை சொரூபம் அற வடிவாம். இதனை நம் வள்ளல் பெருமானார், "தாகாதல் எனத் தரும் தருமசத்திரமே" எனவும் "அன்புருவாம் பரசிவமே" எனவும் "கருணையும் சிவமே" எனவும் அருட்பாவில் பல இடங்களில் அருளியுள்ளார். நம் காரைக்கால் அம்மையாரும் "இறவாத இன்ப அன்பு" எனும் பாசுரத்தில் "அறவா நீ ஆடும் போது" என இறைவனை தரும வடிவாய் கண்டு மகிழ்கின்றார்.*

*இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மை யாதெனில், கடவுள் அருளுக்கு பாத்திரமாக எண்ணுவோர் உயிரிரக்கத்தையே வழிபாடாகக் கொள்ள வேண்டும். இதனையே வள்ளல் பெருமானார்* **"ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு"** *என்று அருளியுள்ளார். மேலும், "எந்த இடத்தில் புலை கொலை அகற்றிய ஜீவர்கள் பிரார்த்தித்தாலும், அக்கணமே அவரது காரண உருவாகிய பிரகாசத்தில் நின்று காரிய உருவாகிய ஒளி வடிவாய்த் தோன்றி அருள் செய்வார்" எனவும் அருளியுள்ளார்.*

**எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே**
**எண்ணிநல் இன்புறச் செயவும்**
**அவ்வுயிர் களுக்கு வரும் இடையூற்றை**
**அகற்றியே அச்ச நீக்கிடவும்**
**செவ்வையுற்று உனது திருப்பதம் பாடிச்**
**சிவசிவ என்று கூத்தாடி**
**ஒவ்வுறு களிப்பால் அழிவுறாது இங்கே**
**ஓங்கவும் இச்சைகாண் எந்தாய்.**

*என்ற பாசுரத்திற்கிணங்க ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் வாழ்ந்து காலமுள்ளபோதே மனிதப் பிறப்பெடுத்ததன் பயனை அடைந்து வாழ்வோமாக!*

**இம்மை இன்பத்தை அடைந்தவர் பெருமை எது?**

**அன்பு, தயை, ஒழுக்கம், அடக்கம், பொறுமை, வாய்மை, தூய்மை முதலிய சுப குணங்களைப் பெற்று, விடய இன்பங்களை வருத்தி முயன்று அனுபவித்துப் புகழ்பட வாழ்தல் என்று அறிய வேண்டும்.**

**Advertisement**

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS ∝

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

Wings of Wisdom

**Books for All Ages**

Unlimited Books Starts @ INR 1200/.

| Scheme | Books at a Time |
|---|---|
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |

Door Delivery Available*

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

# SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 / VALASARAVAKKAM 42105700 / PORUR 42107304 / OMR 42863478 / VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

# மூத்தோர்சொல் அமிர்தம்

*அரசன் ஒருவன் பெரிய படை திரட்டினான். பக்கத்து நாட்டை வெல்வதற்காக அந்தப் படையுடன் பனி படர்ந்த மலைகளின் வழியே சென்று கொண்டிருந்தான். அங்கே ஓரிடத்தில் உடலில் ஆடை ஏதும் இல்லாமல் துறவி ஒருவர் அமர்ந்து இருந்தார்.*

*ஆளைக் கொல்லும் இந்தக் குளிரில் ஆடை இல்லாமல் அவர் இருக்கிறாரே என்று இரக்கப் பட்டான் அரசன்.*

*விலை உயர்ந்த தன் போர்வையைக் கழற்றி அவரிடம் தந்தான். ஆனால் அவரோ "இந்தக் குளிரைத் தாங்க இறைவன் எனக்குப் போதுமான உடைகளைத் தந்து இருக்கிறார். என்னால் ஆடை இல்லாமல் இந்தக் குளிரைத் தாங்க முடியும். யாராவது ஏழைக்கு இந்தப் போர்வையைத் தாருங்கள்" என்றார்.*

*'உடலில் எந்த ஆடையும் இல்லை. சொந்தமாக எந்தப் பொருளும் இல்லை. இவரைவிட ஏழையை எங்கே தேடிக் கண்டுபிடிப்பது' என்று நினைத்து "ஐயா! உங்களைவிட ஏழையை நான் கண்டுபிடிக்க முடியுமா?" என்று கேட்டான் அரசன்.*

*அதற்கு அந்தத் துறவி, "அரசே! நீர் எங்கே செல்கிறீர்?" என்று கேட்டார்.*

*"பக்கத்து நாட்டை வென்று என்நாட்டுடன் சேர்த்துக் கொள்ள படை எடுத்துச் செல்கிறேன்" என்றான் அரசன்.*

*அதைக் கேட்டு சிரித்த துறவி, "ஒரு நாட்டிற்கு அரசராக இருந்தும் நீர் நிறைவு அடையவில்லை. உம் உயிரையும் ஆயிரக்கணக்கான வீரர்களின் உயிரையும் பணயம் வைத்துப் பக்கத்து நாட்டை உம் நாட்டுடன் சேர்க்க முயற்சி செய்கிறீர். எனவே என்னைவிடப் பெரிய ஏழை நீர்தான். இந்தப் போர்வையை நீரே வைத்துக் கொள்ளும்" என்றார்.*

*தலை கவிழ்ந்த அரசன் அவரை வணங்கினான். "ஐயா! என் கண்களைத் திறந்து விட்டீர்.* **உள்ளம் நிறைவு அடையாதவர்களே ஏழை** *என்ற உண்மையை உணர்ந்து கொண்டேன். இனி எந்த நாட்டின் மீதும் படை எடுக்க மாட்டேன்" என்று சொல்லி விட்டுத் தன் படைகளுடன் நாடு திரும்பினான்.*

**செல்வம் என்பது சிந்தையின் நிறைவு – குமரகுருபரர்**

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். நாட்டு மக்கள் எதற்கு எடுத்தாலும் அரசனைக் குறை சொல்கிறார்களே என்று வருந்தினான்.

அறிவுடையவனான அவன் தன் மக்களுக்கு நல்ல பாடம் புகட்டி அவர்களைத் திருத்த நினைத்தான்.

மக்கள் நடமாடும் கடை வீதியின் நடுவே பாறாங்கல் ஒன்றை வைக்கச் செய்தான்.

அந்த வழியாக வந்த பலரும் வீதியில் கிடந்த கல்லைப் பார்த்தார்கள். சிலர் "என்ன கொடுமை இது? நடு வீதியில் இவ்வளவு பெரிய கல் கிடக்கிறது. இதை எடுத்து ஓரமாகப் போட வேண்டும் என்ற பொறுப்பு அரசுக்கு இல்லையே. இப்படி இருந்தால் நாடு எப்படி முன்னேறும்?" என்று முணுமுணுத்தபடி அதைத் தாண்டிச் சென்றார்கள்.

ஒரு வாரம் சென்றது. நாட்டு மக்கள் எல்லோரையும் அங்கே கூடச் சொன்னான் அரசன்.

பிறகு வீரன் ஒருவனைப் பார்த்து, "நடு வீதியில் கிடந்த அந்தக் கல்லைத் தூக்கி ஓரமாகப் போடு" என்று கட்டளை இட்டான்.

அப்படியே அந்த வீரனும் கல்லைத் தூக்கினான். அதன் அடியில் பை ஒன்று இருந்தது. அதில் 'இந்தக் கல்லை எடுத்து ஓரமாகப் போடுபவர்க்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசு' என்று எழுதி இருந்தது.

அங்கிருந்த எல்லோரும் ஆயிரம் பொற்காசுகளை இழந்து விட்டோமே என்று வருந்தினார்கள்.

"எதற்கு எடுத்தாலும் அரசைக் குறை கூறுகிறீர்களே. நாட்டு மக்களாகிய உங்களுக்குப் பொறுப்பு இல்லையே" என்றான் அரசன். அவர்கள் எல்லோரும் தலை கவிழ்ந்தபடி நின்றார்கள்.

**படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்**
**மாண்பயன் எய்தல் அரிது.**

நாட்டை ஆளும் தலைவருடைய உறவு தானே வந்து சேர்ந்தாலும், சோம்பல் உடையவர் சிறந்த பயனை அடைய முடியாது.

**திருச்சிற்றம்பலம்**

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**தவத்திரு ஊரன் அடிகள் உரையிலிருந்து...**

மந்திரங்களெல்லாம் வெளிப்படையாகப் பொருளைக் காட்டாதவை. மறைந்த பொருளுடைமையின் மந்திரங்கள் மறைமொழி என்று கூறப்பெறும்.

**நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழிதானே மந்திரம் என்ப -1434**

என தொல்காப்பியத்தில், பொருளதிகாரம் செய்யுளியல் 178 ஆம் சூத்திரம் கூறுகின்றது.

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்**

என திருக்குறளில் நீத்தார் பெருமை அதிகாரத்தின் எட்டாவது குறட்பா இதையே எடுத்துரைக்கின்றது.

சைவத்துக்கு ஐந்தெழுத்து மந்திரம் (பஞ்சாக்கரம் - பஞ்சாக்ஷரம்). திருவைந்தெழுத்து. **சிவயநம.**

வைணவத்துக்கு எட்டெழுத்து மந்திரம் (அட்டாக்கரம் - அஷ்டாக்ஷரம்). **ஓம் நமோ நாராயணாய.**

முருக வழிபாட்டில் ஆறெழுத்து மந்திரம். **ஓம் நமோ குமராய.** பிற்கால கௌமாரத்தில் சரவணபவ.

இதுபோல் சமணத்தில் பஞ்சநமஸ்கார மந்திரம் என ஒவ்வொரு சமயமும் தனக்கெனத் தனித்தனி மந்திரங்களை ஏற்படுத்திக் கொண்டன.

வள்ளல்பெருமானார் இளமையில் சைவ மந்திரங்களைக் கைக் கொண்டார். பின்னாளில் சன்மார்க்கத்திற்கென அருட்பெருஞ்ஜோதி மகாமந்திரத்தை ஆக்கி அளித்தருளினார்.

அகவலில் “வான்பெறற்கரிய” என்று தொடங்கும் 1311 ஆம் அடி முதலாக “ஓதநின்று உலவாது ஓங்கும் மந்திரமே” என முடியும் 1320 ஆம் அடிமுடிய 10 அடிகளும் ஒரு தொடராக “மந்திரமே” என விளித்துப் போற்றுகிறது.

அதாவது வான் உலகத்துத் தேவர்களும் பெறுவதற்கு அரிதான பலவகை நலன்கள் எல்லாவற்றையும், வள்ளற்பெருமான் மிக விரைவில் பெறுவதற்கு நாதமந்திரமாம், அருட்பெருஞ்ஜோதி அருள் செய்தது.

மேலும் பலபல கற்ப காலங்கள் கழிந்தாலும் அழியாத நிலையை அருட்பெருஞ்ஜோதியாம் புனிதமந்திரம் வள்ளற்பெருமானுக்கு அளித்தருளியது என இந்த அகவல் வரிகள் அருட்பெருஞ்ஜோதி மகாமந்திரத்தின் சிறப்பினைக் கூறுகின்றது. இன்னும் இதனை விரிவாக "ஐந்தென எட்டென" எனத் தொடங்கும் அகவல் வரிகளில் காண்போம்.

**ஐந்து என, எட்டுஎன, ஆறுஎன, நான்குஎன**

**முந்துஉறு மறை முறை மொழியும் மந்திரமே**

ஐந்தென - ஐந்து எழுத்து என்றும்

எட்டென - எட்டெழுத்து என்றும்

ஆறென - ஆறெழுத்து என்றும்

நான்கென - நான்கெழுத்து என்றும்

முந்துறுமறை - காலத்தால் முற்பட்டனவான வேதங்கள்

முறைமொழியும் - முறைபடுத்திக் கூறும்

மந்திரமே - மந்திரமாகிய அருட்பெருஞ்ஜோதியே

ஐந்தெழுத்து மந்திரத்தை முதன் முதலில் குறிப்பிடும் தமிழ்நூல் சிலப்பதிகாரம். சிலப்பதிகாரத்தில் காடுகாண் காதையில்

**"அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும்**
**வருமுறை எழுத்தின் மந்திரம் இரண்டும்**
**ஒருமுறையாக உளங்கொண்டு ஓதி" - 128- 30**

என ஐந்தெழுத்து எட்டெழுத்து மந்திரங்கள் குறிக்கப்பெறுகின்றன. 'ஐந்தும் எட்டுமாவன பஞ்சாக்கரம் அட்டாக்கரம்' என அரும்பதவுரைகாரர் உரையெழுதுகின்றார். அடியார்க்கு நல்லாரும், 'ஐந்தானும் எட்டானும் வருமுறைப்பட்ட எழுத்தினையுடைய மந்திரமிரண்டையும்' என்றுரை கூறினாரல்லது, அவையின்னவெனக் கூறவில்லை. இளங்கோவடிகள் சிவபஞ்சாக்கரத்தையும் நாராயண மந்திரத்தையும் உளங்கொண்டே ஐந்தெனவும் எட்டெனவும் கூறினாரென்பது சிலப்பதிகாரம் கற்பார்க்கு நன்கு விளங்கும்.

உமாபதி சிவாசாரியார் அருளிய கொடிக்கவியில் ஓர் அருமையான பாட்டு.

**அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்**
**பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்**
**பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்**
**கூசாமற் காட்டக் கொடி.**

*இதனுள் 5,8,6,4, எனக் கூறும் உமாபதியார், மேலும், பிஞ்செழுத்து, பெருஎழுத்து, பேசும் எழுத்து, பேசா எழுத்து என நான்கு எழுத்துக்களைக் கூறுகிறார்.*

*"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்" என்னும் உமாபதியார் வாக்கும்,*

*"ஐந்தென, எட்டென, ஆறென, நான்கென" என்னும் வள்ளற்பெருமான் வாக்கும் எவ்வளவு ஒத்திருக்கின்றன என்பதைக் காண்க. 5,8,6,4 என்னும் உமாபதியார் கூறிய அதே வரிசையிலேயே வள்ளற்பெருமானும் கூறுகின்றார்.*

*ஐந்து, எட்டு, ஆறு, நான்கு – எழுத்துக்கள் பற்றியும் பிஞ்சு எழுத்து, பெரு எழுத்து, பேசும் எழுத்து, பேசா எழுத்துக்கள் என்னவென்பதையும் இங்குக் காண்போம்.*

| | | |
|---|---|---|
| *ஐந்தெழுத்து* | - | **சிவயநம** |
| *எட்டெழுத்து* | - | **ஓம் ஆம் ஔம் சிவயநம** |
| *ஆறெழுத்து* | - | **ஓம் சிவயநம** |
| *நான்கெழுத்து* | - | **ஓம் சிவய** |
| *பிஞ்சுஎழுத்து* | - | **வ** |
| *பெருஎழுத்து* | - | **சி** |
| *பேசும் எழுத்து* | - | **வ** |
| *பேசா எழுத்து* | - | **சி** |

*பதி எழுத்தாகிய சிகரம் "**சி**" பெரு எழுத்தும், பேசா எழுத்தும் ஆகும். சிவத்தினும் பெரிது வேறு இன்மையான் சிகரம் பெருவெழுத்து எனப்பட்டது. நாவினால் உச்சரியாது மனத்தால் உன்னத் (எண்ணத்) தக்கதாதலின் பேசா எழுத்து எனப்பட்டது.*

*பேசா எழுத்தாகிய சிகரத்தை வள்ளற்பெருமான் ஊமை எழுத்து என்றும் பேசா மந்திரம் என்றும் கூறுவார்.*

*"ஓரெழுத்தில் ஐந்துண்டென்பார் வெண்ணிலாவே – அது*
**ஊமையெழுத்** *தாவதென்ன வெண்ணிலாவே" – 2864*

*என்னும் திருஅருட்பா வெண்ணிலாக் கண்ணியில் ஓர் எழுத்து என்பதும், ஊமை எழுத்து என்பதும் சிகாரத்தையேயாகும்.*

*ஓரெழுத்து – சி*

*அதில் ஐந்து – விந்து + நாதம் + ச்+ அ +இ = சி*

*ஊமை எழுத்து – பேசா எழுத்து.*

ஏசாத தந்திரம் **பேசாத மந்திரம்**

ஈசான மேலென்றீர் வாரீர்

ஆசாதி இல்லீரே வாரீர் என்னும் அம்பலவாணர் வருகைக் கண்ணியில் பேசாத மந்திரம் என்றது சிகரமாகிய பேசா எழுத்தையே (ஊமை எழுத்தையே) யாகும். ஐந்து, எட்டு, ஆறு, நான்கு எழுத்து மந்திரங்களைப் பற்றிய முக்கிய குறிப்புகள் சிலவற்றை இங்கு அறிவது இன்றியமையாதது.

**ஐந்தெழுத்து மந்திரம்**

பஞ்சாக்கரம்: சூக்குமபஞ்சாக்கரம் (சிவயநம), தூலபஞ்சாக்கரம் (நமசிவய), காரணபஞ்சாக்கரம் (சுவய), மகாகாரண பஞ்சாக்கரம் (சிவ), மகாமனு (நாயோட்டு மந்திரம் –சி)

**எட்டெழுத்து மந்திரம்**

அட்டாக்கரம் (அஷ்டாக்ஷரம்) எட்டெழுத்து என்றதுமே "ஓம் நமோ நாராயணாய" என்பதுதான் அனைவருக்கும் நினைவுக்கு வரும். அது வைணவத்தின் எட்டெழுத்து மந்திரம். சைவத்திலும் ஓர் எட்டெழுத்து மந்திரம் உண்டு. அது பஞ்சாக்கரம் போன்று அதிகம் வழக்கிலில்லாதது. ஆதலின் அதனைப் பலர் அறியார்.

உமாபதி சிவனாரின் கொடிக்கவியில் "எட்டெழுத்து" என்றும், வள்ளற்பெருமானது அருட்பெருஞ்ஜோதி அகவலில் எட்டென என்றும் குறிக்கப்பெறுவது சைவ எட்டெழுத்து மந்திரம்தான். வள்ளற்பெருமான் வாக்கிலேயே அது பிறிதோரிடத்துப் பயின்று வந்துள்ளது.

**ஓமென்பதற்கு முன் ஆமென் றுரைத்துடன்**

**ஊமென்று** காட்டினீர் வாரீர்

நாமென்று நாட்டினீர் வாரீர் என்னும் திருவருட்பா ஆறாம் திருமுறை அம்பலவாணர் வருகைக் கண்ணியில் (100) கூறப்பெறுவது அதுதான். **ஆம்** என்பதும் **ஊம்** என்பதும் **ஹாம் ஹூம் (ஹௌம்)** என்பனவற்றின் தமிழ் வடிவங்களாம்.

ஓம் ஆம் ஊம் (ஔம்) என்னும் மூன்று பீஜாக்கரங்களுடன் கூடிய பஞ்சாக்கரம் சைவத்தின் எட்டெழுத்து மந்திரமாகும்.

தமிழில் – **ஓம் ஆம் ஊம்** (ஔம்) **சிவயநம.**

வடசொற்களில் – **ஓம் ஹாம் ஹூம்** (ஹௌம்) **சிவயநம**

ஓம் ஹாம் ஹௌம் சிவாயநம என்பது சைவத்தில் எட்டெழுத்து (அஷ்டாக்ஷரம்). இங்கு அகவலின் எட்டெழுத்து மந்திரம் என்று கூறப்பெற்றது இதுவே.

**ஆறெழுத்து மந்திரம்**

பஞ்சாக்கரத்தோடு ஓங்காரத்தைச் சேர்க்க உருவாகும் **ஓம்சிவயநம** என்பதே சைவத்தில் ஆறெழுத்து மந்திரமாகும்.

பொதுவாக, ஆறெழுத்து என்றதுமே **"சரவணபவ"** என்றுதான் பலரும் எண்ணுவர். சரவணபவ என்பது முருகன் ஆறெழுத்து, கௌமார வழக்கு. சித்தாந்த சைவ வழக்கன்று. சைவத்தில் ஓங்கார பஞ்சாக்கரமே ஆறெழுத்து.

வள்ளற்பெருமான் முருகனை வழிபட்ட காலத்தில், முதல் திருமுறையில் திருத்தணிகைப் பதிகங்கள் பாடியபோது முருகன் ஆறெழுத்தையே பாடியுள்ளார். முதல் திருமுறையில் ஆறெழுத்துண்மை, புண்ணிய நீற்று மான்மியம், உறுதி உணர்த்தல் என்னும் பதிகங்களைக் காண்க.

ஆறெழுத்துண்மை பதிகத்தின் பத்துப் பாடல்களிலும் தணிகை முருகனை விளித்து "உன்றன் ஆறெழுத்தை உச்சரித்து இங்கு உயர்ந்த திருவெண்ணீறிட்டால்" என்று பாடுகின்றார். புண்ணிய நீற்று மான்மியம் ஐந்தாவது பாடலில் "ஆறாக்கரப்பொருளே என அருள்நீறணிந்திடிலே" என முருகனை ஆறாக்கரப் பொருளாகக் குறிக்கின்றார். உறுதி உணர்த்தல் மூன்று பாடல்களிலும், தம் நெஞ்சை விளித்து "தணிகையன் ஆறெழுத்துண்டு, வெண்ணீறு உண்டு, நீ இரவும் பகலும் துதி செய்திடுதி கண்டாய்" எனத் தம் நெஞ்சுக்கு உறுதி உணர்த்துகின்றார். ஒரு பாடலில் "அஞ்சேல் இது சத்தியம்" என்றும், மற்றொரு பாடலில் "என் ஆணை" என்றும் ஆணையிட்டு உரைக்கின்றார். இங்கு ஆறெழுத்து என்பது தணிகையன் ஆறெழுத்து என்றே குறிக்கப்பெற்றது. முருகன் ஆறெழுத்து சரவணபவ என்றே இன்று பெரும்பாலும் வழக்கில் உள்ளது. வேறு ஆறெழுத்தை வழக்கில் காணோம்.

"ஆறெழுத்து அடங்கிய அருமறை வேள்வி" என்னும் திருமுருகாற்றுப்படை அடிக்கு உரை வரையும் நச்சினார்க்கினியர், ஆறெழுத்தினைத் தன்னிடத்தே அடக்கியிருக்கின்ற, கேட்டற்கறிய, மறை உச்சரிக்கும் மந்திரம், **'நமோகுமராய'** என்று எழுதுகின்றார். 'நமக்குமராய' என்றொரு பிரதிபேதத்தை டாக்டர் உ.வே. சாமிநாதையர் அடிக்குறிப்பிற் காட்டியுள்ளார். 'நமோ குமராய' என்பது இன்று வழக்கிற் காணோம். இன்று வழக்கிலுள்ள முருகன் ஆறெழுத்து மந்திரம் **"சரவணபவ"** என்பதே. வள்ளற்பெருமான் செய்தருளிய சுப்பிரமணியம் என்னும் உபதேசத்திலும் சரவணபவ என்னும் ஆறெழுத்தின் பொருளையே அருளியுள்ளார்.

இளமையில் முருகனைப் பாடிய காலத்தில் முருகன் ஆறெழுத்தையே கூறிய வள்ளற்பெருமான், பின்னாளில் ஆறெழுத்தாக ஓங்கார பஞ்சாக்கரத்தையே உபதேசித்துள்ளார். இறுக்கம் இரத்தின முதலியாருக்கு வரைந்த பஞ்சாக்கர உபதேசத் திருமுகத்தில் **ஓம் சிவாய நம** என்னும் எழுத்து மூலம் உபதேசிக்கப்பெற்றுள்ளது.

இங்கு அகவலில் ஆறெழுத்து எனக் கூறப்பெறுவது ஓங்கார பஞ்சாக்கரமே.

**நான்கெழுத்து மந்திரம்**

**ஓம் சிவய** என்னும் ஓங்கார காரண பஞ்சாக்கரம். சைவத்தில் எட்டெழுத்து, ஆறெழுத்து, நான்கெழுத்து மந்திரங்கள் பஞ்சாக்கரத்தின் வகைகளே. இவ்வெல்லா வகைகளையும் வள்ளற்பெருமான் ஓதி உணர்ந்து அவற்றின் அனுபவம் கைவரப் பெற்றுள்ளார்.

இருப்பினும் இவை இறைவனின் தன்மையை வெளிப்படையாக சொல்லாததால் சுத்த சன்மார்க்கத்திற்கென தனி மந்திரத்தை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அருளால் கிடைக்கப் பெற்றார். இதனை பேருபதேசத்தில் வள்ளல் பெருமானாரே அருளியுள்ளார்.

“நாம் நாமும் முன் பார்த்தும் கேட்டும் லக்ஷியம் வைத்துக்கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லக்ஷியம் வைக்கவேண்டாம். ஏனென்றால், அவைகளில் ஒன்றிலாவது குழூஉக்குறி யன்றித் தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னெதென்றும், கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல், மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள்.

மேலும், சுத்தமாயாகாரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால், அனுபவித்து அறியாத அனுபவமும், கேட்டறியாத கேள்வியும் நாம் கேட்டிருப்போம். மேலும், இறந்தவர்கள் மீளவும் எழுந்து வந்திருப்பார்கள். ஆதலால், கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத்தருணமே. ஆதலால் இத்தருணம் **இக்காலமே சன்மார்க்கக் காலம்.**

இத்தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி, எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு, முடிவான இன்ப அனுபவத்திற்குச் சாதக சகாயமான திருவருள் மகாவாக்கியத்

திருமந்திரத்தை தமது உண்மையை வெளிப்படக் காட்டும் மாகாமந்திர வாக்கியத்தை எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம், எனது மெய்யறிவின்கண் அனுபவித்தெழுந்த உண்மைஅறிவு அனுபவ ஆனந்த இன்பத்தை நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம், திரிபு, மயக்கம் இன்றி அடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய **ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையைப்** பற்றிக் குறிப்பித்தேன்; குறிப்பிக்கின்றேன்; குறிப்பிப்பேன்.

நமது ஆண்டவர் கட்டளை இட்டது யாதெனில் நமக்கு முன் சாதனம் கருணை ஆனதினாலே, ஆண்டவர் முற்சாதனமாக

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**

**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் **பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந்தயவுடைய பேறறிவேயாம்.** அவ்வாறு விளங்குகின்ற ஒருவராகிய கடவுளை இவ்வுலகினிடத்தே ஜீவர்கள் அறிந்து அன்பு செய்து அருளை அடைந்து அழிவில்லாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பலவேறு மதங்களிலும் பலவேறு மார்க்கங்களிலும் பலவேறு லக்ஷியங்களைக் கொண்டு, நெடுங்காலமும் பிறந்து பிறந்து அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவும் இன்றி விரைந்து விரைந்து பல வேறு ஆபத்துகளினால் துன்பத்தில் அழுந்தி இறந்து இறந்து வீண்போகிறார்கள்.

இனி இச்ஜீவர்கள் விரைந்து விரைந்து இறந்து இறந்து வீண்போகாமல், உண்மையறிவு, உண்மை அன்பு, உண்மை இரக்கம் முதலிய சுபகுணங்களைப் பெற்று நற்செய்கை உடையவராய், எல்லா சமயங்களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும் உண்மைப்ப பொது நெறியாகி விளங்கும் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்று, பெருஞ் சுகத்தையும், பெருங்களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு, மேற்குறித்த உண்மைக் கடவுள் தாமே திருவுள்ளங் கொண்டு சுத்த சன்மார்க்கத்திற்கென இம்மகாமந்திர திருவாக்கியத்தை நமக்கு அருளியுள்ளார்.

எனவே இதற்குமேல், வேறு மந்திரங்கள் வேண்டுவதில்லை, ஏனைய எல்லா மந்திரங்களும் இதனுள் அடங்கும். அடங்கவே, இது மகாமந்திரமாய் மந்திர அரசாய் விளங்குகின்றது. இதனை நாளும் ஓதி பயன்பெறுவோமாக!

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

நமது தருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு மாதஇதழில்

- திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின் ஆன்மீக உபதேசங்கள் அடங்கிய கட்டுரைகள்
- ஆன்மீக சந்தேகங்களுக்கான தெளிவுரைகள்
- சன்மார்க்க நிகழ்வுகள்
- யோக தியான பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றின் தகவல்களை அறிந்துகொள்வதற்கு சந்தாதாரராகி பயனடையுங்கள்.

**ஆண்டு சந்தா ரூ.120**

உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களும் இந்த ஞான கருத்துக்களை அறிய அவர்களையும் சந்தாதாரராக்கி பயனடையச் செய்யுங்கள். **5 வருட சந்தா ரூ.600/-** தொடர்புக்கு: **8012680865**

*www.vallalarmission.org*
*vallalartrust@gmail.com*
*www.facebook.com/vallalarmission*
*Vallalarmission. Cell no: +91 99427 76351*





# கோசாலை

அன்பு உள்ளங்களே!



உயிர்கள் மீது நாம் தயவு காட்டும்போதுதான் இறைவன் நம்மீது தயவு காட்டுவார். அதனால்தான் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்றார் வள்ளல் பெருந்தகை. அந்த வகையில் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் பசுக்களை வைத்து பராமரித்து வருகின்றோம். தயவுள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்து பசு பராமரிப்பிற்கு உதவலாம்.

பசு பராமரிப்பிற்கு உதவ விரும்புவோர்
கீழ்கண்ட அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு: +91 91235 38685, +91 94874 54688**

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly October 2018, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை



அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி



## வடலூர் மாதப்பூசம்

**31.10.2018** – ஐப்பசி 14 – புதன்

**27.11.2018** –கார்த்திகை 11–செவ்வாய்

**24.12.2018** – மார்கழி 09 – திங்கள்

## திருவண்ணாமலை பௌர்ணமி கிரிவலம்



**23.10.2018** – ஐப்பசி 06 – புதன்
இரவு 10:02PM – மறுநாள் இரவு 11:00PM வரை

**22.11.2018** – கார்த்திகை 06 – வியாழன்
அன்று காலை 10:12AM – மறுநாள் காலை 11:12AM வரை

**அனைவரும் அருள் பெற வருக! வருக!!**

தொடர்புக்கு: **88385 40176, 63801 11475**

திரு/திருமதி

Redirect to : அருள்திரு **பாபு சாது**
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: **+91 80126 80865**